அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 168.

என் இல. [illegible] 11/1
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1981, பெப்புருவரி மாதம் 26ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச தாபனத் தலைவர்கள் யாவர்க்கும்.

## மின்சாரத்தைச் சிக்கனப்படுத்தல்.

இயன்ற மட்டில் மிகக்கூடியளவு மின் சக்தியை மிச்சம் பிடிப்பதற்கு இலங்கை மின்சார சபையுடன் ஒத்துழைக்குமாறு உங்களை வேண்டுதல் மிகவும் இன்றியமையாததாகவிருக்கின்றது.

02. பிற்பகலில் மின்சாரம் துண்டிக்கப்படும் பிரதேசங்களில் அமைந்துள்ள அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் அலுவலகத்தை விட்டு வீட்டுக்குப் போகும் சமயம் மின்விளக்குகள், மின்விசிறிகள், மற்றும் மின்னுபகரணங்கள் ஆகியவற்றின் ஆளிகளை நிறுத்தத் தவறிவிடுகின்றனரென்றும் அதன் விளைவாக மின்சாரத் துண்டிப்புக்குரிய காலம் முடிவடைந்ததும் மின்விளக்குகள், மின்விசிறிகள் முதலியன மீண்டும் தொழிற்படுவதோடு மறுநாள் காலை வரை பெருமளவு மின்சாரம் வீணாக்கப்படுகின்றதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

03. மின்சாரத்தைச் சிக்கனப்படுத்தும் பணிக்குப் பொறுப்பாக இருக்கும் பொருட்டு ஒவ்வோர் அலுவலகத்திலும்/உப அலுவலகத்திலும் குறிப்பிட்டவோர் உத்தியோகத்தரை அல்லது உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள். குறித்த உத்தியோகத்தரின்/உத்தியோகத்தர்களின் பெயர், பதவி என்பன குறிப்பிடப்பட்டு, ஒவ்வொரு நாளினதும் இறுதியில் மின்விளக்குகள், மின்விசிறிகள், காற்றுச் சீராக்கிகள் முதலிய யாவற்றினதும் ஆளிகள் நிறுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை மட்டுமன்றி, குறித்த நாள் முழுவதிலும் தொழிற்படும் ஏதும் அநாவசியமான மின்விளக்குகள், மின்விசிறிகள் முதலியவற்றின் ஆளிகள் நிறுத்திவைக்கப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பையும் ஏற்குமாறு வேண்டப்படுதல் வேண்டும்.

04. தமது அறைகளில் காற்றுச்சீராக்கிகளை வைத்திருக்கும் உத்தியோகத்தர்கள் தற்போதைய மின் பற்றாக்குறைக்காலத்தின் போது இக் காற்றுச்சீராக்கிகளைத் தொழிற்படுத்தாதிருக்குமாறு குறிப்பாக வேண்டப்படுகின்றனர்.

05. மின்சாரத் துண்டிப்புத் தொடங்குவதற்குச் சில நிமிடங்கள் முன்னதாக மின்விளக்குகள், மின்விசிறிகள் முதலியவற்றின் ஆளிகள் நிறுத்தப்படுதல் விரும்பத்தக்கதாகும்.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஜ. பி. எல். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

சிசி/